KTEJ 2023 01(1): 21 - 36

Kolumpu Tamil E-Journal (KTEJ)

Volume 01, Issue I, 2023

# விஷேட தேவையுடைய மாணவர்களுக்கான வினைத்திறனான கற்றல், கற்பித்தலில் ஆசிரியர்களின் முகாமைத்துவம்

Mr. N.Koventhan[1], Mrs. R.Thakshaayini[2]

[1,2]Department of Education and Childcare,

Faculty of Arts and Culture, Eastern university, Sri Lanka

[1] koventhannadarasa@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கையின் மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு அளவீட்டு ஆய்வாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களது கற்றலை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் முகாமைத்துவத்தை ஆராய்தல் எனும் நோக்கத்தின் அடிப்படையில் இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது. இக்கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களைக் கொண்ட 10 பாடசாலைகள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. இப் பத்து பாடசாலைகளிலிருந்து 10 அதிபர்கள் நோக்க மாதிரியின் அடிப்படையிலும், விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் 20 ஆசிரியர்களும், விசேட தேவையுடைய 50 மாணவர்களும், இம்மாணவர்களின் பெற்றோர்கள் 50 பேரும் எளிய எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து, அவதானம், நேர்காணல் எனும் ஆய்வுக் கருவிகள் பயன்படுத்தப்பட்டுத் தரவுகள் சேகரிக்கப்பட்டன, பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக்கொண்டு ஆய்வு நோக்கங்களின் அடிப்படையில் கலப்பு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வின் முடிவுகளாக இம்மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் வினைத்திறனான கற்பித்தலின் பங்களிப்பு குறைவாக இருப்பதற்கான காரணங்களாகப் ஆசிரியர்களுக்கு விசேட தேவையுடைய பிள்ளைகளைக் கையாள்வது பற்றிய தெளிவின்மை, விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு போதிய பயிற்சிகளைப் பெற வசதிகள் இல்லாமை, இம் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் முகாமைத்துவம் தொடர்பான கற்கை நெறிகளை தொடராமை, பெற்றோரின் ஆதரவு குறைவாக உள்ளமை, பாடசாலையில் பல்வேறு வகையான விசேட தேவையுடைய பிள்ளைகளை முகாமைத்துவப்படுத்தாமை போன்றன இனங்காணப்பட்டதுடன், இம்மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்குத் தீர்வுகளாக அதிபர்கள் ஆசிரியர்களுக்கு வினைத்திறனான கற்றல், கற்பித்தலை மேற்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், ஆசிரியர்களுக்கு ஆசிரிய ஆலோசகர்கள் தகுந்த ஆலோசனைகள் வழங்குதல், பாடசாலையில் ஆசிரியர்களின் முகாமைத்துவ அறிவை வளர்க்கும் வகையில் செயற்றிட்டங்களை செய்தல், அதிபர் ஆசிரியர்களை மாணவர்களின் வீட்டிற்குச் சென்று பெற்றோருடன் மாணவர்களின் கற்றல் தொடர்பில் கலந்துரையாட வைத்தல். போன்றன விதந்துரைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்**: *விசேட தேவையுடையோர், கற்றல், கற்பித்தல், வினைத்திறன், முகாமைத்துவம்*

## 1. ஆய்வு அறிமுகம்

பொதுவாக சாதாரண மாணவர்களுக்குத் தேவைப்படாத விசேட கவனம் மற்றும் குறிப்பிட்ட தேவைகள் அவசியமாக இருக்கும் மாணவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் என்பர் (Ebony Howard, 2021). பாடசாலையில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகவும், மகத்துவம் மிக்கதாகவும் காணப்படுகின்றது.

கற்றல் என்பது அறிவு, சிந்தனைத்திறன் மற்றும் நடத்தைகளில் ஏற்படுகின்ற மாற்றத்தினைக் குறிக்கின்றது. சமூக அறிகைவாதிகளின் கருத்தின் படி கற்றலுக்கான அடிப்படையாக நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றத்தினைக் குறிப்பிடலாம் (Ponniah 2020). விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் ஈடுபடுகின்ற போது பல பிரச்சினைகளைத் எதிர்கொள்கின்றனர். இப் பிரச்சினைகளைத் தீர்த்து இம் மாணவர்களுக்கும் கல்வியில் சம வாய்ப்பை ஏற்படுத்த ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியம் பெறுகின்றது. இவ் விடயம் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் எவ்வாறு உள்ளது மற்றும் இதில் ஆசிரியர்களின் முகாமைத்துவத்தை அறியும் பொருட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

### 1.1 ஆய்விற்கான பின்னணி / நியாயத்துவம்

பிள்ளைகள் ஒரே தன்மையான ஆற்றல், அனுபவமுடையவர்களாக இருப்பதில்லை. ஒவ்வொரு மாணவரும் பல்வேறுபட்ட கற்றல் தேவையுடையவர்களாகக் காணப்படுவார்கள். இவர்கள் அனைவரையும் சீரான வழியில் நெறிப்படுத்துவது ஆசிரியரின் பொறுப்பாகும். வகுப்பறையில் மீத்திறன் மாணவர்கள், மெல்லக்கற்கும் மாணவர்கள், கற்றல் இடர்பாடுடைய மாணவர்கள் என பல வகையான மாணவர்கள் காணப்படுவார்கள். இவர்களின் கற்றல் பாங்கு, ஆற்றல், திறன், போன்றன ஒவ்வொருவருக்கும் வித்தியாசமானதாகும். இவர்கள் கற்றுக் கொள்வதில் வித்தியாசமான கற்றல் தேவையுடையவர்களாகக் காணப்படுவார்கள் (Anas and Nawastheen, 2019).

Mohaned Ghazi Abed என்பவர் 2018 இல் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வியில் ஆசிரியர்களின் பணி என்னும் தலைப்பில் சவுதி அரேபியாவில் செய்த ஆய்வில் பாடத்திட்ட வழிகாட்டி, பயிற்சிப் பொருட்கள் மற்றும் பாடசாலை வசதிகள் சிறப்பாக இல்லாத காரணத்தினால் அம்மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் சிரமப்படுகின்றனர் எனக் குறிப்பிடுகிறார்.

### 1.2 ஆய்வுப் பிரச்சினை

மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்கள் கற்பதற்கான விசேட அலகுகள் நான்கு உருவாக்கப்பட்டுள்ள போதிலும் இம் மாணவர்களுக்கான விசேட தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். விசேட தேவையுடைய மாணவர்கள், குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கோ, கல்வியற் கல்லூரிகளுக்கோ செல்வது மிகக் குறைவாகவே உள்ளது. இது ஒரு பாரிய பிரச்சினையாகும்.

மேலும் பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர் இணைந்து செயற்படும் போக்கு குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் குறைவாகவே உள்ளது. ஆசிரியர்கள் முன்வந்தால் பெற்றோர்கள் முன்வருவது அரிது. அத்துடன் பாடசாலையில் இருந்து இம் மாணவர்களின் வீடுகள் அதிக தூரத்தில் இருப்பதனால் ஆசிரியர்கள் இம்மாணவர்களின் வீடு தரிசித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்பதை ஆய்வாளன் நேரடியாக இம் மாணவர்களின் வீடுகளுக்கு சென்ற போது அவதானிக்க முடிந்தது.

ஆசிரியர்கள் குறைவாக உள்ளமையினால் குறித்த பாடசாலைகளில் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை உள்ளது. இதில் கணனி வழிக் கற்பித்தலை மேற்கொள்வது ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. இன்றைய நிலையில் விசேட தேவையுடைய மாணவர்களின் சிறந்த வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு வகுப்பறை முகாமைத்துவம் சரியானதாக இல்லை. இம் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒரு சிலர் விசேட தேவைக் கல்வி தொடர்பான கற்கை நெறிகளை கற்காமலே கற்பிக்கின்றனர். இதனால் எந்த விசேட தேவையுடைய மாணவர்களை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய விளக்கம் இன்மையால் சாதாரண மாணவர்களுக்குக் கற்பிப்பது போன்றே கற்பிக்கின்றனர். இதனால் இம் மாணவர்கள் கற்றலில் முன்னேறுவது குறைவாக உள்ளது. இவ்வாறான நிலை மிக முக்கியமான பிரச்சினையாக குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகிறது.

### 1.3 ஆய்வுப் பிரச்சினைக் கூற்று

மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் வினைத்திறனான கற்றல், கற்பித்தல் குறைவாகக் காணப்படுகின்றமையால் இம் மாணவர்கள் பொருத்தமான கல்வியை பெறுவதில் சிரமப்படுகின்றனர்.

### 1.4 ஆய்வினது முக்கியத்துவம்

ஒரு பாடசாலையின் முழுமையான வெற்றி என்பது சகல மாணவர்களிடத்திலும் அடிப்படை தேர்ச்சியை ஏற்படுத்துவதாகும். எனவே விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றல் வீழ்ச்சியடையும் போது அது பாடசாலையில் மொத்த அடைவில் தாக்கம் செலுத்தும் என்பதை உணர்ந்து செயற்பட வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கல்வி உரிமை ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமை. எனவே அதனை முழுமையாக நிறைவேற்ற பாடசாலை மட்டத்தில் முழுமையான செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பதை பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் உணர்ந்து செயற்பட இவ்வாய்வு முக்கியமானதாகும்.

விசேட தேவையுடைய மாணவர்களது பெற்றோர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தங்கள் பிள்ளைகள் மீது அதிக அக்கறை செலுத்தவும், பாடசாலையுடனும், தமது பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் ஆசிரியரிடமும் சுமூகமான உறவை ஏற்படுத்தவும், ஆசிரியர்கள் மூலம் பெற்றோர்களுக்கு அறிவூட்டவும் இவ் ஆய்வு துணை நிற்கும் என்பதற்காக மேற்கொள்ளப்படுகிறது. இவர்களின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், எதிர்காலத்தில் இந்த ஆய்வுப் பரப்போடு தொடர்புபட்ட ஆய்வுகளை மேற்கொள்பவர்களுக்கு ஆய்வின் நோக்கத்தை பூரணப்படுத்துவதற்கும், தரவுப் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கும் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது.

## 2. சார்பிலக்கிய மீளாய்வு

திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல், ஆகியவற்றை உள்ளடக்கியதே முகாமைத்துவம் (Stoner, 1996). பொதுவாக சாதாரண மாணவர்களுக்குத் தேவைப்படாத விசேட கவனம் மற்றும் குறிப்பிட்ட தேவைகள் அவசியமாக இருக்கும் மாணவர்களை விசேட தேவையுடைய மாணவர்கள் என்பர் (Ebony Howard, 2021).

Uzunboylu & Özcan, என்பவர்கள் 2019 ஆண்டு விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்பித்தல் முறைகளின் பகுப்பாய்வு எனும் தலைப்பில் துருக்கியில் செய்த ஆய்வில் ஆராய்ச்சியின் போக்குகளை வெளிப்படுத்துவதற்காக மற்ற அறிவியல் தரவுத்தளங்கள் ஆய்வு செய்யப்படலாம், கற்பித்தல் முறைகள் மற்றும் விசேட கல்வி பற்றி மேலும் ஆராய்ச்சி அதிக கவனம் செலுத்தலாம், விசேட கல்வியில் கற்பித்தல் முறைகள் குறிப்பாக ஆசிரியர்கள் ஒரு

வழிகாட்டுதலை வழங்க வேண்டும். தற்போதைய மற்றும் ஆதார அடிப்படையிலானவை என்ன சிறப்பு கல்வியில் கற்பித்தல் முறைகள். வெவ்வேறு உள்ளடக்க பகுப்பாய்வு அளவுகோல்கள் ஆராய்ச்சி மாதிரி, தலைப்பு, முறை மற்றும் எண் ஆராய்ச்சியிலும் ஈடுபட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்கள் வகுப்பறைக் கற்றல் நடவடிக்கைகளில் பின்தங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே ஆசிரியர்கள் கற்றலில் சிரமங்களை எதிர் கொள்கின்ற மாணவர்களைப் பற்றி அதிக கவனம் எடுத்துக்கொள்ளவும், கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபாட்டினை அதிகரிக்கவும் வேண்டும் (Shazny, 2021).

இத்தகைய தொழில்நுட்பக் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு அவர்களின் பணிகளைச் செய்வதற்கான திறனை மேம்படுத்த அதிக வாய்ப்புகளை வழங்குகிறது, மேலும் ஊனமுற்றோரின் கல்வியை ஊடாடுவதன் மூலம் மேம்படுத்துகிறது. இதனால், கருத்துகளை மிகவும் திறம்பட கற்பிக்க முடியும். கற்றல்/கல்வி செயல்பாட்டில் கணனி இருப்பதால், மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்கள் சமூகத் திறன்களை மேம்படுத்தவும், மேம்பட்ட வாழ்க்கை முறைகள் மூலம் சமூக தொடர்புகளில் ஈடுபடவும் உதவி பெறலாம் (வாக்கர், 2018).

### 3. ஆய்வு முறையியல்

ஆய்வு முறையியலானது, ஆய்வின் பொது நோக்கத்தையும், சிறப்பு நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு, ஆய்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு அவற்றுக்கு விடை காண்பதன் அடிப்படையில் ஓர் அளவை நிலை முறையிலான ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுப் பிரதேசம், மாதிரித் தெரிவு, தரவுப் பகுப்பாய்வு முறை போன்ற பல முக்கிய விடயங்களைக் கொண்டதாக அமைகிறது.

#### பொது நோக்கம்

விசேட தேவையுடைய மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதுடன் அவர்களது கற்றலை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் வினைத்திறனான கற்பித்தல் முகாமைத்துவத்தை ஆராய்வதாகும்.

#### ஆய்வின் விசேட நோக்கங்கள்

1. விசேட தேவையுள்ள பிள்ளைகளை இனங்காணல்
2. விசேட தேவையுடைய மாணவர்களுக்கு வழங்கப்படும் வினைத்திறனான கற்றல், கற்பித்தல் செயன்முறைகளைக் கண்டறிதல்.
3. மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் கற்றல், கற்பித்தல் பிரச்சினைகளைக் பகுத்தறிதல்.
4. மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களின் வினைத்திறனான கற்றல், கற்பித்தலில் ஆசிரியர்களின் முகாமைத்துவ ஈடுபாட்டை இனங்காணல்.
5. மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வினைத்திறனான கற்றல், கற்பித்தலில் ஆசிரியர்களின் முகாமைத்துவ ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளையும், ஆலோசனைகளையும் பரிந்துரைத்தல்.

#### ஆய்வின் மாதிரித் தெரிவு

ஆய்வு முறையிலே மாதிரி மிக முக்கியமான முழுக் குடித்தொகை இடமும் ஆய்வினை மேற்கொள்வது இயலாத ஒன்றாகும். அச்சந்தர்ப்பத்திலேயே மாதிரி ஒன்றைத் தெரிவு செய்யவேண்டும். குடித்தொகையை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஒரு குடித்தொகையில்

இருந்து குறிப்பிட்ட உறுப்பினர்கள் ஆய்வில் ஈடுபடுவர். மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு விசேட தேவையுடைய மாணவர்களும், அவர்களது பெற்றோர்களும், இம்மாணவர்ளுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களும், அதிபர்களும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஆய்விற்காகத் தரவுகள் சேகரிக்கும் பொருட்டு அடிப்படையாக அமைவது மாதிரி முறையாகும். இங்கு ஆய்வுத் தலைப்புக்கு ஏற்ப தரவுகளைப் பெறும் பொருட்டு நோக்க மாதிரி, எளிய எழுமாற்று மாதிரிகளின் அடிப்படையில் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

அட்டவணை 01: ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள்


| வகை | அதிபர்கள் | ஆசிரியர்கள் | வி.தே.மாணவர்கள் | பெற்றோர்கள் |
|---|---|---|---|---|
| 1AB – 02 | 02 | 10 | 11 | 11 |
| 1C - 05 | 05 | 19 | 30 | 30 |
| II - 02 | 02 | 07 | 12 | 12 |
| III - 01 | 01 | 04 | 07 | 07 |
| **மொத்தம்** | **10** | **40** | **60** | **60** |

ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளில் உள்ள 10 அதிபர்களும் நோக்க மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். இப்பத்துப் பாடசாலைகளில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்குக் கற்பிக்கும் 40 ஆசிரியர்களுள் 20 ஆசிரியர்கள் 2:1 என்பதன் படி எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப்பத்துப் பாடசாலைகளில் இனங்காணப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்கள் ஒரு பாடசாலையில் 5 பேர் எனும் வீதத்தில் 10 பாடசாலைகளிலும் 50 மாணவர்கள் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். இப்பத்துப் பாடசாலைகளில் இனங்காணப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களது பெற்றோர் ஒரு பாடசாலையில் 5 பேர் எனும் வீதத்தில் 10 பாடசாலைகளிலும் 50 பெற்றோர்கள் எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டனர்.

## 4. தரவுப்பகுப்பாய்வும், வியாக்கியானமும், கலந்துரையாடலும்

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வினைத்திறனான கற்றல், கற்பித்தலில் ஆசிரியர்களின் முகாமைத்துவ பங்களிப்பை அறியும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற இவ் ஆய்வுக்கான தகவல்கள் வினாக்கொத்துக்கள், அவதானம், நேர்காணல் மூலம் திரட்டப்பட்டன. அந்த வகையில் ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் வழங்கிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அளவை நிலை ஆய்வு முறையில் Excel மூலம் பகுப்பாய்வு செய்து அதனை வியாக்கியானமும், கலந்துரையாடலும் செய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**4.1 விசேட தேவையுடைய மாணவர்களுக்கு வழங்கப்படும் வினைத்திறனான கற்றல், கற்பித்தல் செயன்முறைகள்.**





உரு 1: பாடசாலையின் வகுப்பறைச் சூழல்.

விசேட தேவையுடைய மாணவர்களின் வினைத்திறனான கற்றல், கற்பித்தலுக்கு பொருத்தமான வகுப்பறைச் சூழல் தொடர்பாகப் பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு அடிப்படையில், பொருத்தம் என 20% மான ஆசிரியர்களும், ஓரளவு என்று 15% மான ஆசிரியர்களும், குறைவு என 40% மான ஆசிரியர்களும், மிகக் குறைவு என 25%மான ஆசிரியர்களும் பதில்களை வழங்கியுள்ளனர். இதிலிருந்து இம்மாணவர்களின் கற்றலுக்குப் பொருத்தமான வகுப்பறைச் சூழல் குறைவாகவே உள்ளது. அவதானம், கலந்துரையாடல் மூலம் வகுப்பறையில் அதிக மாணவர்கள் காணப்படுகின்றமை, கணனி வசதிகள் இல்லாமை, இடவசதி குறைவு, இம்மாணவர்களின் விசேட தன்மைக்கு ஏற்ப தளபாட வசதிகள் இல்லாமை போன்ற காரணங்களால் இம்மாணவர்களது கற்றலுக்குப் பொருத்தமான வகுப்பறை குறைவாகவே உள்ளது.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பறைச் சூழல் சிறந்த முறையில் இல்லை இதனால் இம்மாணவர்கள் கற்றலைச் சிறப்பாக மேற்கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். வகுப்பறைச் சூழல் சிறப்பாக அமையும் போதுதான் விசேட தேவையுடைய மாணவர்கள் சிறப்பாகக் கற்றலை மேற்கொள்வார்கள் (பக்கீர் ஜ.்.பர், 2004). மேற்கூறிய ஆய்வு முடிவானது, இந் ஆய்வை முன்னகர்த்திச்செல்வதற்கு உதவுகிறது.

**4.2 மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களின் வினைத்திறனான கற்றல், கற்பித்தலில் உள்ள பிரச்சினைகள்**

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள்





உரு 02 கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள்

விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள் உள்ளனவா? என்பது தொடர்பாக கேட்கப்பட்ட போது கிடைக்கப்பெற்ற பதில்களின்

பகுப்பாய்வின் படி 10% ஆன ஆசிரியர்கள் அதிகம் என்றும், 10% ஆன ஆசிரியர்கள் ஓரளவு என்றும், சுமார் 20% ஆன ஆசிரியர்கள் மிகக் குறைவு என்றும், 60% ஆன ஆசிரியர்கள் குறைவு என்றும் பதிலளித்தனர். பகுப்பாய்வின் படி விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல், கற்பித்தலுக்கான போதிய வளங்கள் குறைவாகவே உள்ளது. எனவே இம் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான போதிய வளங்கள் காணப்பட வேண்டும். இதன் அடிப்படையில் அதிபர்களுடன் இது தொடர்பாக கலந்துரையாடியதன் பிரகாரம் 50% ஆன அதிபர்கள் எதிர்காலத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மிகப் பொருத்தமான வகுப்பறைச் சூழலை உருவாக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதிலிருந்து விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலுக்கு பொருத்தமான வகுப்பறைச் சூழல் குறைவாகவே உள்ளது. குறைவு, மிகக்குறைவு என பதில் அளித்தவர்கள் கூறிய காரணங்களாக இடவசதி குறைவு, அதிகப்படியான மாணவர்கள் காணப்படுகின்றமை, கேட்டல், பார்வை குறைபாடுடைய மாணவர்களுக்கு ஏற்ற வகையில் வகுப்பறை ஒழுங்கமைக்கப்படவில்லை எனக் கூறினர். எனவே பிள்ளைகளின் கற்றலில் ஆர்வமூட்டும் காரணிகளுக்கு வகுப்பறைச் சூழல் இன்றியமையாதது. மாணவர்களின் எண்ணிக்கைக்கும், பல்வகைமைக்கும் ஏற்ப வகுப்பறையின் வசதிகள் இருத்தல் வேண்டும். சிறந்த வகுப்பறைச் சூழலே விசேட தேவையுடையோரது கற்றல், கற்பித்தல் மேம்பாட்டிற்கு வெற்றியளிக்கும் என்பது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களது எதிர்பார்ப்பாகும்.

ஆனால் (பக்கீர் ஜ:.பர்,2004) மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வகுப்பறைச் சூழல் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்டுள்ளார். அந்த ஆய்விலும் வகுப்பறைச் சூழல், பௌதீக சூழல், உளவியல் சூழல் என்பன சிறப்பாக அமையும் போதுதான் விசேட தேவையுடைய மாணவர்கள் சிறப்பாக கற்றலை மேற்கொள்வார்கள் என கூறப்பட்டுள்ளது. இவ்வாறு மேற்கூறிய ஆய்விலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சிறந்த வகுப்பறைச் சூழலை உருவாக்குவதன் மூலம் அவர்களது கற்றலை அதிகரிக்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது.





உரு 3 மாணவர்களின் சுய கற்றல்.

விசேட தேவையுடைய மாணவர்கள் சுய வழிக்கற்றலில் ஈடுபடுவதுண்டா? என ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட வினாவுக்கு 25%மான ஆசிரியர்கள் நன்று எனவும், சுமார் 15%மான ஆசிரியர்கள் சராசரி எனவும், 40%மான ஆசிரியர்கள் குறைவு எனவும், 20%மான ஆசிரியர்கள் மிகக் குறைவு எனவும் பதிலளித்தனர். இதனால் சுய கற்றலில் ஈடுபடுவது குறைவு என்ற முடிவிற்கு வரமுடியும். கலந்துரையாடலில் சுய கற்றல் குறைவிற்கான காரணங்களாக ஆசிரியரின் உதவி தேவை, அடிப்படை எழுத்தறிவு குறைவு, அவர்களுக்கான அன்பு, காப்புத் தேவைகள் குறைவாக

உள்ளது எனக்கூறினர். விசேட தேவையுடைய மாணவர்களிடையே காணப்படும் தாழ்வு மனப்பாங்குகள், பிறரில் தங்கி நிற்கும் மனநிலை, முன்வரத் தயக்கம், கூச்ச சுபாவம், ஞாபகசக்தி குறைவு, பாடசாலைக்குத் தொடர்ச்சியாக சமூகமளிக்காமை போன்ற விடயங்கள் இம்மாணவர்களின் சுய கற்றலை குறைக்கின்றது (Angeaw and Upul Indika, 2011). எனவே மேற்கூறிய ஆய்வு முடிவானது, இந் ஆய்வை முன்கொண்டு செல்வதற்கு உதவுகின்றது.

விசேட தேவையுடைய பிள்ளைகளின் பெற்றோர் பரிகார கற்பித்தலுக்கு வழங்கும் ஒத்துழைப்பு




உரு 4 பெற்றோர் பரிகார கற்பித்தலுக்கு வழங்கும் ஒத்துழைப்பு

விசேட தேவையுடைய பிள்ளைகளின் பெற்றோர் பரிகார கற்பித்தலுக்கு வழங்கும் ஒத்துழைப்பு வழங்குகின்றனரா? என கேட்டப்பட்ட வினாவிற்கு மிகச் சிறப்பானது என 5% ஆன ஆசிரியர்களும், சிறப்பானது என 20% ஆன ஆசிரியர்களும் திருப்தியானது என 15% ஆன ஆசிரியர்களும், குறைவானது என 35% ஆன ஆசிரியர்களும், மிகக் குறைவானது என 15% ஆன ஆசிரியர்களும் பதிலளித்தனர்.

பகுப்பாய்வின் படி பெற்றோர்கள் குறைவான ஒத்துழைப்பே வழங்குகின்றனர். என்ற முடிவுக்கு வரமுடியும். குறைவு, மிகக் குறைவு எனில் வகுப்பறை கற்றல் கற்பித்தலில் பெற்றோரின் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கேட்கப்பட்டமைக்கு இவர்கள் கூறும் ஆலோசனைகளாகப் பின்வருவனவற்றை குறிப்பிட்டனர்.

கற்றலில் இவர்களது நிலைமைகளை எடுத்துக்காட்ட வேண்டும், விசேட தேவையுடைய மாணவர்கள் செய்த சாதனைகளை எடுத்துக் கூறுதல், பாடசாலை கூட்டங்களுக்கு இவர்களுக்கு அழைப்பு விடுத்தல், போன்ற விடயங்களைக் கூறினர். அதிபர்களுடன் கண்ட நேர்காணல் அடிப்படையில் 70% ஆன அதிபர்கள் பெற்றோர்களின் ஒத்துழைப்பு குறைவு என பதிலளித்தனர். எவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும் என கேட்கப்பட்ட வினாவிற்கு பெற்றோருடன் ஆசிரியர் கலந்துரையாடல், பெற்றோரின் குறைபாடுகளை கண்டறிந்து உதவி வழங்கும் நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தல், பெற்றோர் பாடசாலைக்கு வந்து ஆசிரியருடன் கலந்துரையாடுவதற்கு நேரத்தை ஒதுக்குதல், போன்ற விடயங்களின் ஊடாக பெற்றோரின் நிலையினை உயர்த்தலாம். பெற்றோரின் நிலைமையினை அறிந்து நடவடிக்கைகள் எடுத்தாலும் பெற்றோர் கடைப்பிடிப்பது குறைவு என்றனர்.

சில பெற்றோர் தமது விசேட தேவையுடைய பிள்ளையை பாடசாலைக்கு அனுப்புவதில் தயங்குகின்றனர். சில பெற்றோர் சிறிது காலம் பொறுத்துப் பார்ப்போம் காலப்போக்கில் பிள்ளை குணமடையலாம் என எதிர்பார்க்கின்றனர். ஒரு சில பெற்றோர் மட்டுமே பிள்ளையை சரியாக விளங்கி பிள்ளையின் விருத்தியில் உதவலாம் என்பதைத் தெரிந்துள்ளனர். உண்மையில்

விசேட தேவையுடைய பிள்ளைக்கு உதவுவதில் பெற்றோரும், ஆசிரியரும் பிரதான வகிபாகத்தை வகிக்கின்றனர். பிள்ளையின் விசேட தேவை பற்றி விரிவான தகவல்களைப் பெற்றோர் அறிந்து கொள்ள வேண்டும்.

பெற்றோர் கற்பிக்கும் ஆசிரியர்களுடன் உரையாட வேண்டும். அவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். பாடசாலையிலும் வீட்டிலும் பிள்ளைக்கு உதவுவதற்காக ஆசிரியருடன் சேர்ந்து ஒரு பொருத்தமான தலையீட்டுத் திட்டத்தை (Intervention Plan) உருவாக்க வேண்டும். தொழில் வாண்மையாளருடன் கலந்துரையாடி அவர்களின் உதவியையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

எவ்வகையான தலையீடுகள், உபாயங்கள், உபகரணங்கள் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படலாம் என்பதை ஆசிரியருடன் கலந்துரையாடித் தீர்மானிக்க வேண்டும். பிள்ளைகளின் தேவைகளை, பலம், பலவீனங்களை, இடர்பாடுகளை விளங்கிக்கொள்வது பிள்ளைக்கு சரியான உதவியைத் திட்டமிட உதவி செய்யும். சில வேளைகளில் பிள்ளைக்கான பொருத்தமான கல்வி உதவியைக் கண்டுபிடிப்பதில் காலதாமதம் ஏற்படலாம்.

நீங்கள் எடுக்கும் நல்ல தீர்மானங்கள் உமது பிள்ளையிடம் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்வதில் பெரும் உதவியாக அமையலாம். மேலும் அது வெற்றிகரமான இளைஞர் பருவ சாதனைகளுக்கும் வழிவகுக்கும். பெற்றோர் என்ற வகையில் உங்களது பிள்ளையைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். நீங்கள் பிள்ளை கற்றலில் எதிர்கொள்ளும் சில பிரச்சினைகளை அவதானித்திருக்கலாம்.

உமது அவதானத்திற்கும், நோக்கலுக்கும் அப்பால் தகுதி வாய்ந்த ஒரு தொழில் வாண்மையாளரின் அல்லது தொழில் வாண்மைக் குழுவின் முறையான ஒரு மதிப்பீடு பிள்ளையின் விசேட கல்வித் தேவையை சிறந்த முறையில் நிர்ணயிக்க அவசியமாகவுள்ளது. பிள்ளையின் விசேட கல்வித் தேவையின் ஒரு முறையான மதிப்பீடு பல வகையான மதிப்பீட்டுக் கருவிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஏனெனில், பிள்ளையின் பிரச்சினையை சரியாக வரையறுக்க ஒரு தனிப்பட்ட மதிப்பீட்டை மட்டும் மேற்கொள்ள முடியாது.


Desforges and abouchar, 2003 பெற்றோருக்கும் பாடசாலைக்கும் இடையிலான தொடர்பினை அதிகரிப்பது தொடர்பாக இங்கிலாந்தில் செய்யப்பட்ட ஆய்வின் பிரகாரம் மாணவர்களின் கற்றலில் இது எவ்வாறான தாக்கத்தை செலுத்துகின்றது என்பதில் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. பெற்றோர்களின் கருத்துக்களை கவனத்தில் கொண்டு அவர்களுடன் இணைந்து கற்றல் கற்பித்தல் தொடர்பாக வரும் பிரச்சினைகளை ஆசிரியர்கள் தீர்ப்பதன் மூலம் பெற்றோர் பங்களிப்பையும் அதிகரிக்க செய்ய முடியும். அதன் மூலம் மாணவர்களின் கற்றலையும் மேம்படுத்த முடியும்.

மேற்கூறிய ஆய்வு முடிவுடன் ஒப்பிடும் போது விசேட கல்வி தேவையுடைய மாணவர்களின் கற்றலில் பெற்றோரின் ஒத்துழைப்பும்,ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்குமான வழிமுறைகள் தொடரபாக பெறப்பட்ட முடிவுகள் ஆய்வாளனின் இந்த ஆய்வு முடிவை உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

Cashin.S, 2008 இல் விசேட தேவையுடைய மாணவர்களுக்கு இடையிலான தொடர்பு எனும் தலைப்பில், ரெனால்ட்ஸ் பர்க் நகரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டுள்ளது விசேட தேவையுடைய மாணவர்கள் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர் அதற்கு பல காரணங்களையும் மேற்கொள்கின்றனர். பெற்றோரின் ஈடுபாடு சிறப்பாக காணப்படுதல் பெற்றோருக்கு மின்னஞ்சல் மூலம் தகவல்களை வழங்கினால் அதற்கேற்ற உடனடி துலங்கல்களை வெளிப்படுத்துகின்றனர். பெற்றோரும் மாணவர்களும் மாற்றத்தை விரும்புகின்றனர். பாடசாலையுடன் நெருக்கமாக காணப்படல், வாராந்த தகவல் தொடர்புகள்

பலமாக காணப்படுதல் போன்ற காரணங்களினால் இம் மாணவர்களின் கற்றலில் மாற்றம் அல்லது வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆகவே வகுப்பறை கற்றல், கற்பித்தலில் பெற்றோரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமான ஒன்றாகும். இந்த விடயத்தில் மேற்கூறிய ஆய்வு முடிவுகளுடன் ஆய்வாளனின் ஆய்வும் தொடர்புபடுகிறது.

**4.3 மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களின் வினைத்திறனான கற்றல், கற்பித்தல் ஆசிரியர்களின் முகாமைத்துவ ஈடுபாடு.**





உரு 5: ஆசிரியர்களின் ஒத்துழைப்பு.

விசேட தேவையுடைய மாணவர்கள், ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனரா? என கேட்கப்பட்ட வினாவிற்கு மிக அதிகம் என 10%மான ஆசிரியர்களும், அதிகம் என 15%மான ஆசிரியர்களும், ஓரளவு என 20%மான ஆசிரியர்களும், குறைவு என 30%மான ஆசிரியர்களும், மிகக்குறைவு என 25%மான ஆசிரியர்களும் பதில்களை வழங்கினர். பகுப்பாய்வின்படி மாணவர்களது ஒத்துழைப்பு குறைவாகவே காணப்படுகின்றது. கலந்துரையாடலின் படி, ஒத்துழைப்புக் குறைவதற்கான காரணங்களாகப் பெற்றோர்களின் கவனம் இன்மை, ஆசிரியருடன் தொடர்பாடல் குறைவு, விசேட தேவையுடைய பிள்ளைகளைக் கவனிப்பது குறைவு, பெற்றோர் வறுமை காரணமாகத் தூர இடங்களுக்குத் தொழிலுக்குச் செல்கின்றமை போன்றவற்றை முன்வைத்தனர்.

பெற்றோர் பிள்ளைகள் மீது செலுத்தும் அக்கறை குறைவு, பெற்றோர் பிரிந்து வாழுதல், பெற்றோரின் கல்வி மட்டம் குறைந்த தன்மை, பொருளாதாரத்தில் பின்தங்கி உள்ளமை போன்ற காரணங்களால் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்றல் செயற்பாட்டிற்குப் பெற்றோரால் ஒத்துழைப்புகள் கூடுதலாக வழங்க முடியாமல் உள்ளது (சோபா, 2013). மேற்கூறிய ஆய்வு முடிவுடன் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோரின் ஒத்துழைப்பு என்னும் விடயத்தில் காணப்பட்ட முடிவுகள் ஆய்வாளனின் இந்த ஆய்வை மேலும் மெருகூட்டுவதாக அமைகிறது.

**4.4 மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான வினைத்திறனான கற்றல், கற்பித்தல் ஆசிரியர்களின் முகாமைத்துவ ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கையும், ஆலோசனையும்**




உரு 6: ஆசிரியர்களின் ஈடுபாடு

விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் ஈடுபாடு உள்ளதா? எனக் பெற்றோரிடம் கேட்கப்பட்ட வினாவிற்கு மிகச் சிறப்பாக என 10%மான பெற்றோரும், சிறப்பானது என 10% மான பெற்றோரும், திருப்தியாக உள்ளது என 20%மான பெற்றோரும், குறைவாக என 40% மான பெற்றோரும், மிகக் குறைவாக உள்ளது என 20%மான பெற்றோரும் பதில் வழங்கினர். ஆகவே ஆசிரியர்களின் ஈடுபாடு குறைவாக உள்ளது. மேற்கொண்ட கலந்துரையாடலில் இதற்கான காரணமாக ஆசிரியர்கள் அதிகாலையில் வேலைக்கு செல்கின்றமை, கணனி வசதிகள் இல்லாமை, பாடசாலையிலிருந்து வீடு அதிக தூரத்தில் உள்ளமை போன்ற காரணங்களால் இம் மாணவர்களின் கற்றலில் ஆசிரியர்களின் ஈடுபாடு குறைவடைகின்றது. ஆசிரியர்கள், வலயக்கல்வி அதிகாரிகள், சமூக அமைப்புக்கள் இணைந்து பெற்றோருக்குத் தகுந்த ஆலோசனைகள் வழங்குவதன் மூலம் இம்மாணவர்களின் கற்றலில் பெற்றோரின் ஈடுபாட்டை அதிகரிக்க முடியும் (Borito citi, 2018).

## 5. முடிவுகளும், விதப்புரைகளும்

### 5.1 முடிவுகள்

ஆய்வுக்குட்படுத்திய விசேட அலகுகளில் 40% ஆன மனவளர்ச்சி குறைபாடுடைய மாணவர்களும், 20% ஆன உடல்சார் குறைபாடுடைய மாணவர்களும், 15% ஆன செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்களும், 15% ஆன பேச்சுத் திறன் குறைபாடுடைய மாணவர்களும், 10% ஆன கற்றல் குறைபாடுடைய மாணவர்களும் காணப்படுகின்றனர்.

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் வினைத்திறனான கற்றல், கற்பித்தலில் ஆசிரியர்களின் முகாமைத்துவ வகிபங்கு குறைவாகவே உள்ளது. இம் மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், நெறிப்படுத்தல் செயன்முறை குறைவாகவே உள்ளது. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் குறிப்பாகப் பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகள், கேட்டல் குறைபாடுடைய பிள்ளைகள், மெல்லக் கற்கும் பிள்ளைகள், உடல் குறைபாடுடைய பிள்ளைகள் காணப்படுகின்றனர்.

குறித்த விசேட அலகுகளில் நவீன தொழினுட்ப சாதனங்கள் குறைவாக காணப்படுகின்றமையால் 80% ஆன ஆசிரியர்கள் நவீன தொழினுட்பத்தை பயன்படுத்தி கற்பிப்பது குறைவாக உள்ளது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பாடசாலைகளில் வகுப்பறை முகாமைத்துவம் இம்மாணவர்களின் கணனி வழிக்கற்றல், கற்பித்தலுக்கு பொருத்தமானதாக இல்லை. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் இம்மாணவர்கள் கிரகித்தல், மனனம் செய்தல், பிரச்சினை தீர்த்தல், பகுத்தல், தொகுத்தல், முதலிய செயற்பாடுகளில் குறைந்த மட்டத்தில் உள்ளனர். கேள்வித் தாள்களைத் தயாரிக்க, விடைத் தாள்களை மதிப்பிட மற்றும் தேர்வு முடிவுகளைப் பகுத்தறிய கணனி பயன்படுத்தப்படுவது குறைவாக உள்ளது.

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் கற்றல், கற்பித்தலுக்கு பொருத்தமான வளங்கள் குறைவாக காணப்படுகின்றமையால் இம்மாணவர்களுக்கான தகவல்களை பரிமாற்றுவது 60% ஆன ஆசிரியர்களுக்கு சவாலாக உள்ளது.

ஆய்வுக்குட்படுத்திய விசேட அலகுகளில் உள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பரிமாற்று வகிபாகத்தை வழங்க முயற்சி செய்தாலும் மாணவர்களின் உடல், உள குறைபாடுகளால் இம்முறை வெற்றியளிப்பது குறைவாக உள்ளது.

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் இம்மாணவர்களின் கற்றல் நிலை குறைவாகவே உள்ளது. இம்மாணவர்களைச் சாதாரண மாணவர்களுடன் ஒப்பிடும் பொழுது குறுகிய நேரத்தில் களைப்படைந்து விடுவர். போசாக்கு இல்லாத காரணத்தினால் நீண்ட நேரக் கற்றல் செயற்பாட்டில் இவர்களால் ஈடுபடமுடிவதில்லை. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலுக்கு ஆசிரியர்கள் முகாமைத்துவ பங்களிப்பு வழங்குவது குறைவாகவே காணப்படுகிறது. இது வரைக்கும் எந்தவொரு செயற்றிட்டங்களும் இம் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கு குறித்த பாடசாலைகளில் நடைபெறவில்லை.

விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோரின் கல்வி மட்டம் குறைவாக உள்ளதனால், இம் மாணவர்களுக்கு வீட்டில் கல்வி கற்றுக்கொடுப்பது சவாலாக உள்ளது. குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் இம்மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு செல்வது குறைவு. ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் விசேட தேவையுடைய மாணவர்களின் பெற்றோர்கள் இப் பிள்ளைகளின் எதிர்காலம் தொடர்பில் விழிப்புணர்வு அற்றவர்களாகவும், இப்பிள்ளைகள் விசேட தேவையுடையவர்களாகக் காணப்படுவதால், இவர்கள் பாடசாலைக்குச் சென்று எதையும் சாதிக்கமாட்டார்கள் என்பதுடன் தங்களுக்குப் பணச்செலவுதான் அதிகரிக்கும் என்பதால் தன்னம்பிக்கை குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். ஆய்வுக்குட்படுத்திய பாடசாலைகளில் பெற்றோர்கள் இம்மாணவர்களுக்குப் பொருத்தமான இணைப்பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடுவது குறைவாகவே காணப்படுகிறது.

### 5.2 விதப்புரைகள்

விசேட தேவையுடைய மாணவர்களின் பல்வகைமைக்கு ஏற்ப ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் வகிபாகங்களை மாற்றியமைக்க வேண்டும். அதாவது பாடவிடயங்களை கதைகளாக கூறுதல் மூலமும், சில வீடியோ காட்சிகள் மூலமும், ஓடியோ காட்சிகள் மூலம் இம் மாணவர்களுக்கு இலகுவான மொழிநடையில் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்கள் தான் கற்ற கற்பித்தல் உத்திகளை கையாண்டு மாணவர்களுக்கு பல தகவல்களை கடத்த வேண்டும். இதற்கு மாணவர்களை தொடர்ச்சியாக அவதானித்து அவர்களது இயலுமைகள், இயலாமைகளை கண்டுபிடித்து மெதுவாக மாணவர்களுக்கு அருகில் இருந்து கற்பிக்க வேண்டும்.

மாணவர்களிடம் ஆசிரியர்கள் சிறப்பான தொடர்பாடலை ஏற்படுத்த வேண்டும். அதாவது செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்களுக்கு ஆசிரியர் சைகை மொழி ஊடாக தகவல்களை வழங்கலாம். இதில் ஆசிரியர்களின் உதட்டசைவுகளை பார்த்து மாணவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய முறையில் தகவல்களை கடத்த வேண்டும்.

இம் மாணவர்களுடன் ஆசிரியர்கள் கலந்துரையாட வேண்டும். மேலும் பாட உள்ளடக்கத்தை கட்டி எழுப்பும் போது எளியவற்றில் இருந்து சிக்கலானவற்றிற்கும், அறிந்தவற்றில் இருந்து அறியாதவற்றிற்கும் மாணவர்களை கொண்டு செல்ல வேண்டும்.

பிள்ளைகளை வெற்றிகரமாக சேர்க்கும் வகுப்பறைகள் மாணவர்களின் கல்விக்காக சிறப்பாக இயங்குகிறது. ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய பல்வேறு கற்பித்தல் முறைகளை வகுப்பறையில் எவ்வாறு உருவாக்குகிறார்கள் என்பதுடன் வெற்றிகரமான ஆசிரியர்கள் மாணவர்களை சிறப்புடன் வழிநடாத்த முடியும் (மேகன் வால்ஷ், 2019).

விசேட தேவையுடைய மாணவர்களின் விசேட தன்மைக்கு ஏற்ப அவர்களை இனங்காணல் வேண்டும். ஆசிரியர்கள் விசேட தேவையுடைய மாணவர்களின் கற்றலுக்கு உதவ வேண்டும், குறிப்பாக பெற்றோர்களும் இப் பிள்ளைகளைச் சரியான முறையில் இனங்கண்டு அவர்களைக் கையாள வேண்டும். பிரதேசத்திற்குப் பொறுப்பான சமூக சேவை அதிகாரி விசேட தேவையுடைய பிள்ளைகளை இனங்கண்டு பாடசாலையில் சேர்ப்பதற்கான வழிவகைகளை பெற்றோருக்கு செய்து கொடுத்தல் வேண்டும். குறிப்பிட்ட கால அளவில் இப்பிரச்சினையைத் தீர்க்க ஆசிரியரை அதிகளவில் கற்பித்தலில் ஈடுபடச் செய்விப்பதே கணினி வழிக் கற்பித்தலின் அடிப்படை நோக்கமாகும். ஆசிரியர் மாணவர் மற்றும் கணினி ஆகிய மூன்றும் இணைந்து செயல்படும்போதே கணினி வழிக்கல்வி சிறப்பாக அமையும்.

தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஆசிரியர்களின் இடத்தினை பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், கணினி மென்பொருள் மற்றும் இணையப்பாவனை என்பன இன்று பிள்ளைகளின் கற்றல் உபகரணங்களாக மாறியுள்ளன (Greenfield Suzuki, 1998). கணினி வழிக் கற்றலுக்கு மாணவரை அதிகமாகக் ஊக்கப்படுத்துதல் வேண்டும். மாணவர்கள் அவர்களின் நோக்கங்களை அடைவதற்கு ஏற்ற அனுபவங்களைக் கொடுக்கிறது. மீளக் கற்றலுக்கு கணினியின் பயன்பாடு மிக முக்கியமானதாகும்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்கேற்ப வகுப்பறைச் சூழல் அமைக்கப்பட வேண்டும். அதற்குப் பாடசாலையின் உதவியுடன் பெற்றோர், கல்வி அதிகாரிகளின் உதவிகளைப் பெற வழிவகுத்தல் அவசியம். இம்மாணவர்களின் விசேட நிலையை ஆசிரியர் உணர்ந்து பொருத்தமான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். இம் மாணவர்களின் விசேட தன்மைக்கு ஏற்ப அவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அடிப்படைத் தேர்ச்சிகளை விசேட தேவையுடையவர்ளுக்கு ஏற்ற விதத்தில் நெகிழ்ச்சித் தன்மை உடையதாக பிரத்தியேகமாகத் தயாரித்தல் வேண்டும்.

ஆசிரியர் பாட, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் இம்மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கி ஊக்குவிக்க வேண்டும். மேலும் பயிற்றப்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்குப் பொருத்தமான ஆசிரியர்களை நியமித்தல். விசேட செயற்றிட்டங்களை மேற்கொண்டு இம்மாணவர்களின் கற்றலை உறுதிப்படுத்தல். அதிபர் சிறந்த முறையில் மேற்பார்வை செய்தல் வேண்டும்.

செயல்நிலை ஆய்வுகளில் ஆசிரியர் ஈடுபட்டு இம்மாணவர்கள் கற்றலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு பரிகாரக் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இம்மாணவர்களுக்கான பயிற்சிப் பாசறைகள், ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். விசேட தேவையுடைய பிள்ளைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல், பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்தல் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்ளும் வகையில் அருகில் உள்ள பாடசாலையில் இம்மாணவர்களை சேர்ப்பதற்கு வலயக்கல்வி அலுவலகம் உதவி புரிதல் வேண்டும்.

விசேடதேவைக் கல்வியுடன் தொடர்புபட்ட பல்கலைக்கழக, கல்வியற் கல்லூரி விரிவுரையாளர்களை அழைத்து பெற்றோர்களுக்குச் செயலமர்வுகள் நடாத்துதல். 1994ல்

யுனெஸ்கோவினால் வெளியிடப்பட்ட சலமன்கா அறிக்கையை (The UNESCO Salamanca Statement) முறையாகப் பின்பற்றுதல் வேண்டும். விசேட தேவையுடைய மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு காணப்படும் வாய்ப்பினை ஆசிரியர்கள் பெற்றோருக்கு தெளிவுபடுத்தல் வேண்டும்.

ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் தொடர்பில் இம்மாணவர்களது நிலைமைகளைப் பெற்றோருக்கு எடுத்துக்காட்டல் வேண்டும். மாலை நேர வகுப்புக்களை நடாத்துதல் வேண்டும். இம்மாணவர்களுக்கு விடுதி வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் வேண்டும். திட்டமிடப்பட்ட கற்பித்தலுக்குத் (Programmed Instruction) தயாரிக்கப்பட்ட பாடப் பொருட்களையே மென்பொருளாக மாற்றி கணினியைப் பயன்படுத்தி மாணவர் எளிதாகக் கற்றுக் கொள்ளலாம். அதற்கு மாணவர் கீழ்க்கண்ட படிகளைப் பின்பற்ற வேண்டும்.

விசேட தேவையுடைய மாணவர்கள் செய்த சாதனைகளை எடுத்துக் கூறுதல், பாடசாலைக் கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தல், இப் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய விழிப்புணர்வை ஆசிரியர், அதிபர் மற்றும் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பெற்றோரின் மனநிலையில் படிப்படியாக மாற்றத்தைக் கொண்டு வருதல் வேண்டும். வகுப்பறைக் கற்றலில் தனிப்பட்ட மாணவனின் கற்றலை விட அனைத்து மாணவரின் கற்றலுக்கே முக்கியத்துவம் தரப்படும்.

விசேட தேவையுடைய பிள்ளைகளது குடும்பத்துடன் பாடசாலை, நெருக்கமான உறவை வலுப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை தொடர்ச்சியாக வழங்குதல், பிற இடங்களில் இயங்கும் விசேட தேவையுடைய பிள்ளைகள் கற்கும் பாடசாலைகளுடன் பெற்றோர்களுக்குத் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற பல விழிப்புணர்வுகளைச் செய்வதன் மூலம் பெற்றோரின் ஈடுபாடும் அதிகரிப்பதுடன் இம்மாணவர்களின் கற்றலும் அதிகரிக்கும்.

செவிப்புலனற்ற மாணவர்களின் கற்றல் அடைவினை அளவிட ஏற்கனவே சைகை மொழியின் ஊடாக வினாக்கேட்பதை ஒளிப்பதிவு செய்து அதே போல் மாணவர்கள் சைகை மூலமாக விடையளிக்கும் போது அவை ஒளிப்பதிவு செய்யப்பட்டு பின் அவற்றை சைகை மொழி புலமையுள்ளோரினால் மதிப்பிட்டு புள்ளி வழங்கும் முறையினை அறிமுகப்படுத்துதல் வேண்டும் (Janarthnan, S ).
புதுக்கருத்தை முழுமையாக புரிந்து கொள்ள இம் மாணவர்களுக்கு தனியாக கற்பிக்க வேண்டும், செயல்களை செய்து முடிக்க அதிக நேரம் வழங்க வேண்டும், மாணவர்களின் அளவுக்கு தகுந்தாற்போல் இலகுவான செயல்களை கொடுத்தல் வேண்டும், ஒரு குறிப்பிட்ட செயலை செய்யும் போது ஒவ்வொரு நிலையிலும் உற்சாகப்படுத்தலும், செய்த செயலைப்பற்றி எடுத்துக்கூறுதலும் வேண்டும் (யூடிஸ் அமைப்பு 2019).

செவிப்புலனற்றோரின் எழுத்துத் திறனை பரீட்சிக்கும் முறையியலில் படங்கள் மூலமாக எழுத்துத்திறனை மதிப்பிடுவது பொருத்தமானதாகும். ஆசிரியர் முழுமையான தொடர்பாடல் திறனை ஏற்படுத்த வேண்டும்.

விசேட கல்வி ஆசிரியர்களை மேற்பார்வை செய்யும் அதிபர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆசிரியர்களின் தொழில் வாண்மைவிருத்தியை கவனத்தில் எடுத்து அவர்களுக்கு தொழில்வாண்மை விருத்தியை பெற்றுக்கொடுப்பதற்கு மாதத்தில் ஒரு தடவையாவது செயமர்வுகளை நடாத்த வேண்டும்.

பின்வரும் சகல பயிற்சி பாடத்திட்டத்திலும் விசேட கல்வி தொடர்பாக அறிவூட்டும் தலைப்புக்களை உள்ளடக்கி அது குறித்து பரந்தளவிலான செயன்முறை புரிந்துணர்வை வழங்க வேண்டும். இதற்கு மேலதிகமாக தற்போது பணிபுரியும் விசேட கல்வி அலுவலர்கள் மற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை உரிய காலங்களில் இற்றைப்படுத்துவதற்காக அறிவுறுத்தப்பட வேண்டும்.

**உசாத்துணைகள்**


அருள்மொழி, செ. (2016). கல்வி ஆய்வு முறை. எவகிறீன் அச்சகம் மட்டக்களப்பு.

சிவகுமார், த. (2009). விசேட கல்வி அறிமுகமும் பிரயோகங்களும். குரு பிறிண்டர்ஸ் திருநெல்வேலி.

ஜ.ஃபர் ப. (2004). வெற்றிகரமான கற்பித்தல் வகுப்பறை முகாமைத்துவம். செலெக்சன் ஒப்செட் அக்கரைப்பற்று.

74-83. https://doi.org/10.33306/mjssh/113.

a young child with a disability. *Journal of Intellectual & Developmental*

analysis study, International Journal of Cognitive Research in Science, Engineering

Anas, P. L.,& Nawastheen, F. M. (2019). Teachers' perception towards in fulfilling

and Education (IJCRSEE), 7(2), 99-107.

Caplan, G. (1974). *Support systems and community mentel helth: lectures on consept*

Classroom, Dominican University of California

Colombo.

Dempsey, I., & Dunst, J. (2004). Helpgiving styles and parent empowerment in families with

Desforges, C., & Abouchaar, A. (2003). *The impact of parental involvement, parental*

*Development.* Behavioral Publications, New York.

*Disability*, *29*:1, 40-51. https://doi.org/10.1080/13668250410001662874.

diverse learners needs in the classroom teaching-learning process. *South Eastern*

*education*, university of Karachi, Pakistan.

efforts. *Exceptional Children*, *81*(1), 79 - 95.

England: DfES. http://relationalschools.org/2017/08/12.

http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4170.

http://wje.sciedupress.com.

https://doi.org/10.1177/0014402914532232.Shazny, S. H. M. (2021). Challenges faced by students with special needs and learning

https://doi.org/10.33015/dominican.edu/2018.EDU.ST.01

Megan Walsh, (2018). The Inclusion of Students with Special Needs in the General Education

Mohaned Ghazi Abed, (2018). Teachers' Perspectives Surrounding ICT Use amongst SEN

Noor, A. 2015, *Parental involvement in special education challenges faced to involving in*

opportunities for them. *Muallim Journal of Social Sciences and Humanities*, *5(*1),

Rodriguez, R. J., Blatz, E. T., & Elbaum, B. (2014). Parents views of schools involvement

Sinnaththambi, M. (2008). *Paadasalaiyum Samoohamum.* Kumaran Puththaha Illam,

Students in the Mainstream Educational Setting, World Journal of Education,

*support and family education on pupil achievemet,* (No. 433). Nottingham,

*Teachers,* (3rd ed.). Houghton Mifflin College Div.

*University International Arts Research Symposium-2019,*

Uzunboylu, H. & Özcan, D. (2019). Teaching methods used in special education: A content

Ysseldyke, J., E. & Algozzine, R. (1994). *Special Education a Practical Ppproach for*